# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2205/3 - 2020 දෙසැම්බර් මස 08 වැනි අඟහරුවාදා - 2020.12.08

*2205/3 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

*அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்*

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் 1 ஆவது பந்தியின் நியதிகளுக்கு அமைவாக கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட இல. 2193/30 மற்றும் 2020.09.16 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, இல.1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள அட்டவணையின் 1 ஆம் பகுதியில், இல. 17 மற்றும் 18 இன் கீழ் உள்ள ஏற்பாடுகள் 2020.11.24 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் இத்தால் திருத்தியமைக்கப் படுகின்றது.

2.

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 17. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின்,<br>(அ) இலங்கை கணக்காய்வு சேவையின் உத்தியோகத்தர்கள்<br>(ஆ) கணக்காய்வு பரிசோதகர் சேவைக்குரிய இல. 06/2006 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை (இணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதி உயர் தரத்தின் /விசேட தரத்தின் உத்தியோகத்தர்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிக் கணக்காய்வாளர் அதிபதியொருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நடவடிக்கை முறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்.<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு. |
| 18. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின்,<br>(அ) அதி உயர் தரத்தின்/விசேட தரத்தின் உத்தியோகத்தர்கள் அல்லாத, இல. 06/2006 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்டத்திற்குரிய கணக்காய்வு பரிசோதகர் சேவையின் உத்தியோகத்தர்கள்<br>(ஆ) இணைந்த சேவைகளைச் சாராத இல. 06/2006 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் பொருள்கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிக் கணக்காய்வாளர் அதிபதியொருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் /சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவாக நியமனம் மற்றும் பதவி உயர்வு.<br>(II) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நடவடிக்கை முறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்.<br>(III) ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல். |

3. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட இல.1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் அவற்றுக்கு அவ்வப்போது செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் என்பன மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல, 1200/9, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, திசெம்பர் 03.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.